பக்கங்கள்:-23

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 03 | சனிக்கிழமை | 17.02.2024 | அதிர்வு 200

# பல நாள் திருடர்கள் இருவர் நேற்று கைது

## களவாடிய பொருள்களும் மீட்பு

(வசந்தன்)



வவுனியாவில் பல் வேறு இடங்களில் 30 இற்கும்

06



# நீதியே இல்லாத ரணிலின் ஆட்சி

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் காட்டம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தின் கீழ் மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி தொடர்பான தரத்தில் இலங்கை பின்னோக்கிச் செல்கின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்ந்தும் தவறான நிர்வாகம் மற்றும் பொறுப்புக்கூறல் குறைபாடு காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் சிரமத்துக்குள்ளாகி வருகின்றது என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

06







# சாய்ந்தமருதைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் நேற்று மாலை நிந்தவூர் கடலில் மூழ்கி மாயம்!

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை, மாளிகைக்காடு – சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் நிந்தவூர் பிரதேச கடலில் படம் எடுத்து விளையாடிக் கொண்டிருந்தபோது கடலில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமல்போயுள்ளனர்.

மாளிகைக்காடு – சாய்ந்தமருது எல்லை வீதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலையில் கல்வி

06

# மைத்திரியின் சகாக்கள் சஜித்துடன் கைகோர்ப்பு



மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் இருவர், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் நேற்று இணைந்துள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் ஹோமாகம

06




தமிழரசின் மூத்த தலைவர் சம்பந்தன் பற்றிய நேற்றைய எனது பதிவுக்குப் பலத்த வரவேற்பு. பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரமுகர்களின் கருத்து நிலை எனக்கு ஆச்சரியத்தை தந்தது. உண்மையை எழுதத் தலைப்பட்டமைக்கு வாழ்த்து என்றார் ஒருவர்.

இன்னொரு முக்கிய பிரமுகரின் கருத்து இது (தம் பெயரைக் குறிப்பிடுவதை அவர் விரும்பவில்லை):-

06

# கட்சி யாப்பின்படி செயல்படுவதுதான் சரியான முறை எனக் கருதுகின்றேன்!

## சுமந்திரன் எம்.பி. கூறுகின்றார்

(பிரபாகரன் டிலக்சன்)

தமிழரசுக் கட்சியின் யாப்பில் இருக்கின்ற விடயங்கள் சரியாக பின்பற்றப்படவில்லை என நீதிமன்றில் சுட்டிக்காட்டப்படுமாக இருந்தால் பொறுப்பான அரசியல் கட்சியாக அதனைத் திருத்தி யாப்பின்படி செயல்படுவதுதான் சரியான முறை என்று நான் கருதுகின்றேன்.

– இவ்வாறு நேற்றிரவு தெரிவித்தார் ஜனாதிபதி சட்டத்தரணியும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

இந்து சமுத்திரத்திலே இந்தியாவின் பாதுகாப்பு என்பது நியாயமானது. ஆகவே நாங்கள் சீன ஆக்கிரமிப்பையும் சீனா இங்கு தொடர்ந்து நிலைகொள்வதையும் நாங்கள் விரும்பவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய தூதுவர் ஸ்ரீ சந்தோஷ் ஜா தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகள் உள்ளிட்ட சிலரை நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பிற்கு பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இங்கு இருக்கக்கூடிய விசேட பிரச்சினைகள் குறித்து இந்திய தூதருடன் கலந்துரையாடி இருக்கின்றோம். இந்திய மீனவர் பிரச்சினை சம்பந்தமாக அவரிடம் குறிப்பிட்டிருந்தேன். அது பற்றி தான் இந்தியப் பிரதமருக்கு ஏற்கனவே கடிதம் ஒன்று எழுதி இருப்பதாகவும் இது விரைவிலே தீர்க்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் உள்ளார் எனவும் இந்தியத் தூதுவர் கூறினார்.

வடக்கில் இருக்கக்கூடிய சீன கடலட்டைப் பண்ணைகள் மூலம் மீனவர்களுடைய வாழ்வாதாரம் பறிக்கப்படுகிறது. இதனைப் பற்றி யாரும் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல் இருப்பது கவலையளிப்பதாக தூதுவர் தெரிவித்தார்.

எங்களுடைய மீனவர்கள் கடலிலே தங்கள் தொழிலை செய்ய முடியாத அளவிற்கு கடற் படுக்கைகள் சீனாவின் கடலட்டை பண்ணைகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன




என்பதனை அவருக்கு நான் சுட்டிக்காட்டியிருந்தேன்.

சீனாவின் வருகை சம்பந்தமாக நாங்கள் பகிரங்கமாக எங்கள் நிலைப்பாட்டை அறிவித்திருக்கின்றோம். நாடாளுமன்றத்தில் கூட அது பற்றி பேசி இருக்கிறேன். இலங்கை தென் சீனக் கடலிலே இருந்திருக்குமாக இருந்தால் நாங்கள் சீனாவினுடைய பாதுகாப்பை பற்றி கரிசரனை கொண்டிருப்போம். ஆனால் இலங்கை இருப்பதோ இந்தியாவில் இருந்து 30 கிலோமீட்டர் அருகிலே, இந்து சமுத்திரத்திலே. இந்தியாவின் பாதுகாப்பு என்பது நியாயமானது. ஆகவே நாங்கள் சீன ஆக்கிரமிப்பையும் சீனா இங்கு தொடர்ந்து நிலைகொள்வதையும் விரும்பவில்லை என்பதனை இந்தியத் தூதுவருக்கு உறுதிப்படத் தெளிவாகச் சொல்லி இருக்கின்றேன்.

இந்தியத் தூதுவருடான இந்தச் சந்திப்பு மிகவும் ஆரோக்கியமானதாகவும் வெளிப்படைத் தன்மை வாய்ந்ததாகவும் இருந்தது. எங்களுடைய கரிசனைகள், அவர்களுடைய கரிசனைகள் இந்த இரண்டையும் ஒருவருக்கு ஒருவர் புரிந்து கொண்டவர்களாக ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக செயல்பட வேண்டும் என்ற கருத்திற்கு உடன்பட்டிருக்கின்றோம். – என்றார்.

“இலங்கை தமிழரசு கட்சியினுடைய தேசிய மாநாட்டுக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நீதிமன்றங்கள் தடை விதித்திருக்கின்றன. இது தொடர்பில் கட்சியின் ஊடகப் பேச்சாளர் என்ற வகையில் உங்கள் கருத்து என்ன?” – என ஊடவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த எம்.ஏ சுமந்திரன் –

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தினால் எங்களுடைய நிர்வாகச் செயலாளருக்குக் கொடுக்கப்பட்ட ஆவணத்தை இன்றே(நேற்று) பார்வையிட்டிருந்தேன். திருகோண–மலை நீதிமன்ற ஆவணம் இன்னும் யாரிடமும் சேர்க்கப்படவில்லை.

கட்சி யாப்பிலே இருக்கின்ற சில சரத்துக்கள் மீறப்பட்டுள்ளன எனக் குற்றம்சுமத்தியே இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்படியான யாப்பு மீறல்கள் இருக்குமாக இருந்தால் அதனை நிவர்த்தி செய்து நாங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு செல்லலாம் என்பதே என்னுடைய கருத்து.

ஏனென்றால் ஒரு கட்சியினுடைய நடவடிக்கையை கட்டுப்படுத்துவது அல்லது முறைப்படுத்துவது அந்த கட்சியினுடைய யாப்பு மட்டுமே. பல தடவைகளிலே நாங்கள் சில விடயங்களைக் கவனிப்பதில்லை. அப்படிக் கவனிக்காமல் இருக்கின்ற போது அது பழக்கமாக வந்துவிடும். ஆனால் யாராவது அதை சவாலுக்கு உட்படுத்தினால் தான் அந்த பிரச்சினை வெளிப்படும். ஆகவே யாப்பில் இருக்கின்ற விடயங்கள் சரியாக பின்பற்றப்படவில்லை எனச் சுட்டிக் காட்டப்படுமாக இருந்தால் பொறுப்பான அரசியல் கட்சியாக அதனை திருத்தி யாப்பின்படி செயல்படுவது தான் சரியான முறை என்று நான் கருதுகின்றேன். – என்றார்.

“வழக்கு தொடர்பிலே தமிழரசுக் கட்சியினுடைய முன்னாள் தலைவர்கள், இந்நாள் தலைவர்கள் யாரேனும் உங்களுடன் கலந்துரையாடி இருக்கிறார்களா?” என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு “யாரும் என்னுடன் இந்த வழக்குச் சம்பந்தமாக கலந்துரையாடவில்லை” எனவும் அவர் தெரிவித்தார்

## கொழும்பில் நாளை 16 மணிநேர நீர் வெட்டு



கொழும்பின் பல பகுதிகளில் இன்று மாலை 5 மணி முதல் 16 மணித்தியால நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

கொழும்பு 11, 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளில் நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது என்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இன்று மாலை 5 மணி முதல் நாளை காலை 9 மணி வரை இந்த நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

அம்பத்தலை நீர் விநியோகக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ள அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேலும் தெரிவித்துள்ளது.



# உயர்நீதிமன்றத்தில் பிரஜையிடம் மன்னிப்புக் கோரினர் பொலிஸார்

நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் இரண்டு கான்ஸ்டபிள்கள் உயர் நீதிமன்றத்தில் பிரஜை ஒருவரிடம் மன்னிப்புக் கோரியுள்ளனர்.

கொட்வின் பெரேரா என்பவரிடமே இவ்வாறு மன்னிப்பு கோரப்படுள்ளது.

கொட்வின் பெரேரா கடந்த 2017ஆம் ஆண்டு நாரஹேன்பிட்டியில் உள்ள தனியார் வைத்தியசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது, வீதியில் குப்பைகளை அகற்றிக் கொண்டிருந்த ஒருவர் விபத்துக்குள்ளாகிய நிலையில், அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துவிட்டு அந்த நபரை வைத்தியசாலையில் சேர்த்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, இந்தச் சம்பவம் தொடர்பில் கொட்வின் பெரேராவைக் கைது செய்து சிறையில் அடைக்க பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் இரண்டு கான்ஸ்டபிள்கள் நடவடிக்கை எடுத்தனர்.

சட்டவிரோதமாகக் கைது செய்து, தடுத்து வைக்கப்பட்டமையால் பாதிக்கப்பட்ட கொட்வின் பெரேரா உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

அதன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டபோது குற்றத்தை ஒப்புக்கொண்ட நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் இரண்டு கான்ஸ்டபிள்கள் கொட்வின் பெரேராவிடம் மண்டியிட்டு வணங்கி மன்னிப்புக் கோரியுள்ளனர்.

# விசேட வைத்தியர்கள் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சை தாமதம்



விசேட வைத்தியர்களின் பற்றாக்குறை காரணமாக அரச வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைகள் தாமதமடைந்துள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மூன்று விசேட வைத்தியர்கள் இருக்க வேண்டிய நிலையில், சில வைத்தியசாலைகளில் ஒருவர் மாத்திரமே உள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் 340 விசேட வைத்தியர்களுக்கான பற்றாக்குறை காணப்பட்டது என்றும், தற்போது சுமார் 400 விசேட வைத்தியர்கள் வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்காக நாட்டை விட்டுச் சென்றுள்ளனர் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

# மருந்து கொள்வனவு குறித்த விசேட கணக்காய்வு நிறைவு



2022 - 2023 ஆம் ஆண்டுகளுக்கான மருந்துக் கொள்வனவு மற்றும் விநியோகம் தொடர்பான விசேட கணக்காய்வு முடிவடைந்துள்ளது.

இது தொடர்பில் பதிலளிக்க சுகாதார அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது என்று கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ. பி.சி. விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாகச் சுகாதார அமைச்சிடம் இருந்து இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, மேற்படி அறிக்கையை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கணக்காய்வாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.




# ஜூலை மாதம் ஆரம்பமாகும் லங்கா பிரிமியர் லீக் தொடர்

ஐந்தாவது லங்கா பிரிமியர் லீக் போட்டித்தொடர் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 21 ஆம் திகதி வரை இந்தத் தொடர் நடைபெறவுள்ளது என்று ஸ்ரீலங்கா கிரிக்கெட் அறிவித்துள்ளது.

ஐந்து அணிகள் பங்குகொள்ளும் இந்தத் தொடரில் 24 போட்டிகள் இடம்பெறவுள்ளன.

போட்டியில் பங்குகொள்ளும் ஒவ்வொரு அணியிலும் ஆகக்கூடியது 24 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

அவர்களில் 6 உறுப்பினர்கள் வெளிநாட்டு வீரர்கள் என்றும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழில் எம்.பிக்கள், புத்திஜீவிகளை நேரில் சந்தித்த இந்தியத் தூதுவர்!



(பிரபாகரன் டிலக்சன்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகள் உள்ளிட்ட சிலரை யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று இரவு 7:30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

மேற்படி சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், அங்கஜன் இராமநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், சி.வி.விக்னேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், ந.ஸ்ரீகாந்தா, வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர்கள், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.




# நாணயக் கொள்கை தொடர்பான இரண்டாவது அறிக்கை வெளியீடு

இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை தொடர்பான இரண்டாவது அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது

பெப்ரவரி மாதத்துக்கான அறிக்கையை வெளியிட்டுள்ள இலங்கை மத்திய வங்கி, பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் படிப்படியான பொருளாதார மீட்சியை நோக்கிய முன்னேற்றத்தை அந்த அறிக்கையில் எடுத்துக் காட்டியுள்ளது.

அண்மைய வரித் திருத்தங்கள் மற்றும் வழங்கல் துறையில் ஏற்பட்ட பின்னடைவுகள் பணவீக்க இலக்கில் இருந்து விலகிச் செல்லக் கூடும் என்ற நிலைமை காணப்பட்டாலும் அது சிறிது காலமே காணப்படும் என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன், வருடாந்தப் பொருளாதார வளர்ச்சியானது 2024 இல் சாதகமானதாக மாற்றமடைந்து, நடுத்தர காலப் பகுதியில் படிப்படியாக அதன் ஆற்றலை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு







வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றிய கல்விக்குக் கரம் கொடும்போம் என்ற செயற்றிட்டத்தின் கீழ் யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணங்கள் மற்றும் சைக்கிள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

பருத்தித்துறையில் உள்ள யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் அலுவலகத்தில் நேற்று மாலை 4 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தெரிவு செய்யப்பட்ட 15 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், மாணவி ஒருவருக்கு சைக்கிளும் வழங்கிவைக்கப்பட்டன.

மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய இலண்டன் கிளை உறுப்பினர்களான இராஜசுந்தரம் சிங்கவாகனம், பாலசிங்கம் றசியசிங்கம் ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றியத்தின் ஊடாக யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் அனுசரணையில் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியில் உதவிச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கத்து.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"தலைவர் பிரபாகரனுக்குப் பின்னர் தமிழரின் தேசியத் தலைமை என்ற உயர்பதவி நிலை அவருக்குக் கிடைத்தது. அவரை எதிர்க்கட்சித் தலைவராக்கியமை மூலம் இலங்கை நாட்டின் தேசியமும் அதை அங்கீகரித்து, அவரை உயர்த்தி வைத்தது. தலைவர் பிரபாகரனுக்குக் கிடைத்த காலத்தையும் விட அதிக காலத்தை சம்பந்தனுக்கு 'சவால் இல்லாத உயர் தலைவர்' என்ற அந்தஸ்துடன் தமிழினம் கொடுத்தது. ஆனால் அவரோ குறுகிய உள்ளூர் அரசியலைச் செய்த மையைத் தவிர, வேறு எதனையும் சாதிக் கவோ செய்யவோ இல்லை. தமிழரின் தேசியத் தலைவராக உயர்த்தப்பட்ட அவர், அந்தத் தேசிய மட்டத்தில் தம்மை நிலை நிறுத்தவில்லை. மாறாக உள்ளூர் வட்டார அரசியலில் குசும்புத்தனம் பண்ணும் மூன்றாம் தர அரசியல்வாதி யாகவே இப்போதும் செயல்படுகிறார். திருகோணமலையில் குகதாசனோடு அவர் பண்ணும் அக்கப்போரைத்தான் – சண்டப்பிரசண்டத்தைத்தான் – அந்த பிரமுகர் இப்படிக் குறிப்பிட்டார் போலும்)

"அவர் கூட்டி வந்த எவருமே – சுமந்தி ரன், விக்னேஸ்வரன், குகதாசன் எவருமே – அவருக்கு விசுவாசமாக நடக்கக்கூடிய, நம்பிக்கை வைக்கக் கூடிய தலைவராக அவர் செயல்படவே இல்லை" – என்று சம்பந்தனைத் திட்டித் தீர்த்தார் அந்தப் பிரமுகர்.

எனக்கு என்னவோ இப்படி கட்சிக்காரர் களே திட்டும் அவல நிலைக்கு தமது கடைசி காலத்தில் சம்பந்தன் சென்றி ருப்பது பரிதாபமாக இருந்தது.

\+ \+ \+

தமிழரசு கட்சியின் இரண்டு வழக் குகளுமே – திருகோணமலை மற்றும் யாழ்ப்பாண வழக்குகள் இரண்டுமே – தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை முள்ளில் விழுந்த சேலை போன்றவை தான்.

கட்சியின் நிர்வாகிகள் அவதான மாக – முன் ஜாக்கிரதையாக – விட யத்தை கையாளாவிட்டால் வழக்குகள் குறைந்தது இரண்டு வருடங்களாவது இழுபட வாய்ப்புண்டு.

இந்த இடைக்கால கட்டாணைகளுடன் வழக்கு இழுபட்டால் கவலையில்லை என்று கட்சி நிர்வாகிகள் கருதினால், வழக்குகளை சவாலுக்கு உட்படுத்தி, சட்டச் சவாலைத் துணிவுடன் எதிர்கொள் ளலாம். அப்படி இழுபடுவதால் கட்சியின் சின்னம் முடக்கப்பட்டு விடாமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

கட்சியின் தலைமையில் யாரும் இந்த வழக்குகள் குறித்து ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுடன் பேசினார் கள் என்று அறிய வரவில்லை. நேற்று யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு வின் கூட்டம் யாழ் செயலகத்தில் நடை பெற்றது. சிறீதரனும் சுமந்திரனும் பக் கத்துப்பக்கத்தில் அமர்ந்திருந்தனர். இடை யிடையே பேசிக்கொண்டனர். எனி னும் கட்சி எதிர்கொள்ளும் வழக்குகள் குறித்து ஒரு வார்த்தை கூட இருவரும் பேசவில்லை.

கட்சிக்காக இந்த வழக்குகளை எதிர்கொண்டு வாதாடத் தயார் என்று சுமந்திரன் பகிரங்கமாக அறிவித்தும், சிறீதரனோ, மாவையோ அவருடன் தொடர்பு கொள்ளவே இல்லை. இரண்டு வழக்குகளும் சுமந்திரனின் பின்னணி யில் தாக்கல் செய்யப்பட்டிருக்கலாம் என்று இருவர்களும் கருதுகிறார்கள் – சந்தேகிக்கிறார்கள் – போலும்.

2019 ஆம் ஆண்டில் – 5 ஆண்டு களுக்கு முன்னர் – இடம்பெற்ற கட்சியின் தேசிய மாநாட்டில் தலைவராக மீளத் தெரிவு செய்யப்பட்ட மாவை சேனாதிராஜா அந்த வருட நிர்வாகிகள் தெரிவில் சட்டத் தரணி கே.வி. தவராஜாவை கட்சியின் சட்டத்துறையைக் கையாளும் உபசெய லாளராக அறிவித்திருந்தார்.

அவரே(தவராஜாவே) இப்போது அந்த பொறுப்புடன் இந்த வழக்குகளைக் கையா ளுகின்றாரோ தெரியவில்லை.

ஆயினும், இந்த வழக்குகளுடன் சம்பந்தப்பட்ட தரப்புகளை அழைத்துப் பேசித் தீர்ப்பதை விடுத்து, விடயத்தைச் சட்டச் சவாலுக்கு உட்படுத்தி, நீதி மன்றத்தில் சந்திக்கும் திட்டத்துடன் கொழும்பில் மூத்த சட்டத்தரணிகளுடன் தொடர்பாடல்கள் – பேச்சுக்கள் – நடக்கின் றன என்பதை அறிந்து கொண்டேன். அதுதான் நிலைமை என்றால் இடைக் கால கட்டாணை வழங்கப்பட்ட இந்த இரண்டு வழக்குகளிலும் விசாரணைகள் முடிவுற குறைந்தபட்சம் இரண்டு வருடங் களாவது செல்லும் என்பதுதான் என் கணிப்பீடு. கணக்கீடு.

அப்படி இழுபட்டால் மகிழப்போகும் முதல் நபராக மாவைதான் இருப்பார்.

இடையில் பொதுத் தேர்தல் வரும், அச்சமயத்தில் தலைமையில் நீடித்தால், வேட்பாளர் தெரிவை வைத்து சுளையா கப் பிடுங்கலாம் என்ற அவரது அனுபவப் பட்டறிவு, இன்னொரு தடவையும் வாய்ப் புக் கிட்டியதால் புளகாங்கிதம் அடையும். அத்தோடு ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி யும் இதே போன்ற புதையல் கிடைக்கும் என்று அவர் நிச்சயம் துள்ளிக்குதிப் பார்.

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைப்பாளரும் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினருமான காமினி திலகசிறி , கெஸ்பேவ மாநகர சபையின் முன்னாள் தவிசாளரும் மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான காமினி சில்வா ஆகியோரே இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந் துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸவைச் சந்தித்து, ஐக்கிய மக்கள் சக்திக்கு தமது ஆதரவை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

## நீதியே இல்லாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமூக நீதி மற்றும் உரிமைகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதற் குப் பதிலாக, கருத்து வேறுபாடுகளை ஒடுக்குவதிலும், மனித உரிமைகள் மீதான சர்வதேச கவனத்தை மட்டுப்படுத்துவதி லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசு அவதானம் செலுத்தியுள்ளது என்றும் மனித உரி மைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட் டியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தின் கீழ் இலங்கை வேகமா கப் பின்னோக்கிச் செல்கின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத் தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனா க்ஷி கங்குலி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் இறுதியில் நாடு ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் தயா ராகும்போது, ரணில் விக்கிரமசிங்க புதிய அடக்குமுறை சட்டங்களுடன் எதிர்ப்புகளை ஒடுக்க வலுவான நடவடிக் கைகளை எடுத்துள்ளார் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம் தெரிவித்துள்ளது.

## சாய்ந்தமருதைச் சேர்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கற்கும் 13 – 15 வயதுக்குட்பட்ட 8 மாண வர்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையை முடித்துக்கொண்டு சைக் கிள்களில் நிந்தவூர் – ஒலுவில் எல்லை கடற்கரைக்குச் சென்று படம் எடுத்து விளை யாடிக் கொண்டிருந்தபோது மாலை 4.20 மணியளவில் அதில் இருவரைக் கடலலை உள்ளிழுத்துச் சென்றுவிட்டது என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்தது.

கடலில் இழுத்துச் செல்லப்பட்டுக் காணாமல்போன மாணவர்கள் இருவரை யும் சம்பவத்தைக் கேள்வியுற்ற நிமிடம் முதல் மீனவர்களும், பொதுமக்களும் இயந்திரப் படகுகளைக் கொண்டு தேடி யும் பெற்று இரவு 9 மணி வரை அந்த மாணவர்களின் உடல்களைக் கண்டு பிடிக்க முடியாமல் இருள் காரணமாக தேடுதல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.

இந்நிலையில், ஏனைய 6 மாண– வர்களையும் அவர்கள் பயணித்த சைக் கிள்களுடன் நிந்தவூர் பொலிஸார் மேல திக விசாரணைகளுக்காகப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்ற னர்.

## பல நாள் திருடர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்பட்ட திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ள னர் என்று பூவரசன்குளம் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்தபோதே இருவரும் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளின் போது பல பொருள்கள் மீட்கப்பட்டன என்றும், 30 இற்கும் மேற்பட்ட திருட்டுச் சம்ப வங்களுடன் அவர்கள் இருவரும் தொடர் புடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் 30 இற்கும் மேற்பட்ட இடங்களில் நீர் இறைக்கும் மோட்டர்கள், குழாய் கிணற்று மோட் டர்கள், சிலிண்டர்கள், மின் விசிறிகள், கிறைண்டர்கள் எனப் பல வகையான பொருள்களைத் திருடிய சம்பவங்களுடன் இருவரும் தொடர்புபட்டுள்ளனர் என் றும், அவர்களிடம் இருந்து திருடப் பட்ட பெருந்தொகைப் பொருள்கள் மீட் கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா, வாரிக்குட்டியூர் மற்றும் சமயபுரம் பகுதிக ளைச் சேர்ந்தவர்களாவர்.

சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன் றில் முற்படுத்தப்பட்டதையடுத்து 14 நாள் கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள னர் என்றும் பூவரசன்குளம் பொலி ஸார் மேலும் தெரிவித்தனர்.

# நான்கு பவுண் தங்க ஆபரணங்கள் திருடிய 32 வயது இளைஞர் கைது!






**(வசந்தன்)**

வவுனியா நகர சபை மைதானத்தில் நடைப் பயிற்சிக்கு வருகை தந்தவரின் நகைகளைத் திருடிய சம்பவம் தொடர்பில் 32 வயது இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் நடைப் பயிற்சிக்காகக் கடந்த சில நாள்களாக வவுனியா நகர சபை மைதானத்துக்கு வந்து சென்றுள்ளார். வழமை போன்று நேற்றுமுன்தினம் மாலையும் நகர சபைக்கு அவர் வந்துள்ளார். இதன்போது தான் அணிந்திருந்த சங்கிலி, காப்பு உள்ளிட்ட 4 பவுண் தங்க ஆபரணங்களை நகர சபை வளாகத்தில் உள்ள மோட்டார் சைக்கிள் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்ட தனது மோட்டார் சைக்கிள் இருக்கைக்குள் வைத்து பூட்டி விட்டு நடைப் பயிற்சிக்குச் சென்றுள்ளார்.

நடைப் பயிற்சி முடிந்த பின்னர் தனது மோட்டார் சைக்கிளை எடுப்பதற்காக அந்தப் பெண் வந்தபோது அவரது மோட்டார் சைக்கிள் இருக்கை உடைக்கப்பட்டு அதில் இருந்த நகைகள் திருடப்பட்டிருந்தன. இதையடுத்து பாதிக்கப்பட்ட பெண் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டையடுத்து தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டலில், குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஜயத்திலக தலைமையில் பொலிஸ் சார்ஜன் திஸாநாயக்க, பொலிஸ் கான்ஸ்டபிள்களான உபாலி, தயாளன், ரணில் ஆகியோர் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, மேற்படி சம்பவம் தொடர்பில் வவுனியா, பம்பைமடுப் பகுதியைச் சேர்ந்த 32 வயது இளைஞர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது திருடப்பட்ட ஆறரை இலட்சம் ரூபா பெறுமதியான 4 பவுண் நகைகளும் அவரின் உடமையில் இருந்து மீட்கப்பட்டன. திருட்டுச் சம்பவத்தின்போது சந்தேகநபர் தப்பிச் செல்லப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என்று வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# இந்திய – இலங்கை அதிகாரிகள் புதுடில்லியில் முக்கிய சந்திப்பு

இந்தியா மற்றும் இலங்கையின் அரச உயர் அதிகாரிகளுக்கு இடையிலான பேச்சு இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் நடைபெற்றுள்ளது.

இந்திய அரசின் நிர்வாக சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறையின் செயலாளர் வி. ஸ்ரீனிவாஸ் மற்றும் இலங்கை பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோர் தலைமையில் நிர்வாக மற்றும் அரச அதிகாரிகள் இடையிலான ஒத்துழைப்பு குறித்த இரு தரப்புப் பேச்சு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இலங்கையைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவில் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் கலாநிதி தர்மஸ்ரீ குமாரதுங்க, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பணிப்பாளர் நாயகம் நாலக களுவெவ ஆகியோர் அங்கம் வகித்திருந்தனர்.

இதேவேளை, இந்திய அரசின் நிர்வாக சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறையின் மூத்த அதிகாரிகள் சிலரும் இந்தப் பேச்சுகளில் கலந்துகொண்டனர்.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர், அடுத்த ஐந்தாண்டுகளில் இலங்கை அதிகாரிகளுக்கான திறன் விருத்தி செயற்றிட்டம் – பயிற்சித் திட்டங்களை மேம்படுத்தல், பல்வேறு உயர்மட்டங்களில் 1000 அதிகாரிகளுக்கு கலப்பு முறையில் பயிற்சிகளை நடத்துதல் போன்ற செயற்றிட்டங்களை முன்வைத்தோம் என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பொலிஸ் அதிகாரப் பகிர்வு 'அவுட்'!

தென்னிலங்கை அரசியல் களம் எத்திசையை நோக்கி அசையும் என்பது தெரியாத ஒரு குழப்பமான சூழ்நிலையே நிலவுகின்றது. எல்லோரும் ஏழு, எட்டு மாதங்களில் நடக்க போகின்ற - தவிர்க்க முடியாமல் கட்டாயம் நடத்தப்பட வேண்டிய - ஜனாதிபதித் தேர்தல் குறித்துப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் அத்தேர்தலில் போட்டியிடுவதா, இல்லையா என்று முடிவெடுக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அத்தேர்தலுக்கு ஒரிரு மாதங்களுக்கு முன்னர் - ஜூலை அல்லது ஒகஸ்டில் - பொதுத் தேர்தலை நடத்தக்கூடியதாக, முற்கூட்டியே நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் வாக்களிப்புக்கு அழைப்பு விடுக்கக் கூடும் என்ற பரவலான பேச்சு கடந்த ஒரிரு தினங்களாக கொழும்பில் சூடு பிடித்துள்ளது.

அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் முதலில் பாதிக்கப்படப் போவது இலங்கைத் தமிழரசுக்கட்சிதான். உள்கட்சிக்குழப்பங்களில்சிக்குபட்டு, நிற்கும் அக்கட்சி அத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியில் பொதுத் தேர்தலை எதிர்கொண்டால், இன்னும் குழப்பங்களைச் சந்திக்க வேண்டிய நெருக்கடி அதற்கு ஏற்படலாம்.

தேர்தல் என்றால் தெற்கில் மீண்டும் சிங்கள - பௌத்த பேரினவாதம் தலைதூக்கும். அது வழமை.

'யானை வரும் முன்னே மணி ஓசை வரும்!' என்பது போல தென்னிலங்கையில் தேர்தல் சூடு பிடிக்க முன்னர் பேரினவாத நிலைப்பாடுகள், பிரதிபலிப்புகள் தீவிரம் பெறத் தொடங்கி விட்டன.

இலங்கைத் தமிழர்களுக்கு நியாயமான அதிகார பரவலாக்கல் என்ற பெயரில், இந்தியத் தலையீட்டின் - அழுத்தத்தின் - பெறுபேறாகக் கொண்டுவரப்பட்டதுதான் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம்.

இலங்கைத் தமிழர்களுக்கு நீதி, நியாயமான அரசியல் தீர்வு ஒன்றை வழங்குவதற்கான ஆரம்ப முனைப்பாக இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987 இல் செய்து கொள்ளப்பட்டது.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட அந்த ஒப்பந்தத்தில் தமிழர் தரப்பு, சிங்கள ஆட்சித் தரப்புடன் ஒப்பமிடவில்லை. மாறாக, தமிழர்களின் ஆணை பெற்ற பிரதிநிதி போல இந்தியாவே அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது - ஈழத் தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு என்ற பெயரில்.

அத்தகைய முனைப்போடு கொழும்பை வலிந்து இழுத்து வந்து, அதிக அழுத்தம் கொடுத்து, நெருக்கடி ஏற்படுத்தி, அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைத்த இந்தியா, பின்னர், அதுவரைத் தான் வலிந்து ஏற்றுக் கொண்ட அல்லது தானாகத் தன்னைத் திணித்துக் கொண்ட அந்தப் பொறுப்பில் இருந்து மெல்லக் கழன்று தமிழர்களை அம்போ என்று கைவிட்டுவிட்டது. அதுவே தமிழர்களின் பட்டறிவாக உள்ளது.

அதனால், இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தின் பெறுபேறாக உருவாக்கப்பட்ட 13 ஆவது அரசமைப்புத் திருத்தமும், அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையும் வெறும் காகிதத்தில் கறுப்பு - வெள்ளை மையில் பதிக்கப்பட்ட அச்சு எழுத்துக்கள் என்ற மட்டத்தில் அடங்கிவிட்டன.

13 ஆவது திருத்தத்தின் கீழ் அரசமைப்பில் பதியப்பட்ட பல அதிகாரப் பகிர்வு விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவேயில்லை. அவை அரசமைப்பில் வெறும் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டமையுடன் அடங்கிவிட்டன. நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பல அதிகார பரவலாக்கல் விடயங்களும் காலக்கிரமத்தில் சட்டத் திருத்தங்கள், அரசியல் நடவடிக்கைகள் மூலம் மீளப் பெறப்பட்டு விட்டன அல்லது பறிக்கப்பட்டு விட்டன.

போதாக்குறைக்கு மாகாண சபைகளை தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மூலம் நிர்வகிக்கும் நடைமுறையும் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னரே சாகடிக்கப்பட்டு விட்டது.

ஒட்டுமொத்தத்தில் இந்தியத் தலையீட்டுடன் - இந்திய அழுத்தத்தின் பெயரில் - கொண்டுவரப்பட்ட மாகாண சபை மூலமான அதிகாரப் பரவலாக்கல் திட்டம் உறைநிலைக்குள் போய் ஆண்டுகள் பல கடந்து விட்டன. அது குறித்து இந்தியாவே அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை.

இனி மாகாண சபை முறைமையின் சவப்பெட்டிக்குக் கடைசி ஆணியை அடிக்க வேண்டியதுதான் மிச்சம்.

அந்த வேலையையும் பிவித்ரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில்ல ஆரம்பித்திருக்கின்றார்.

13 ஆம் திருத்தம் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரங்களை விலக்கிக் கொள்வதற்கான அரசமைப்புத் திருத்தத்தைத் தனிநபர் பிரேரணையாக அவர் இப்போது முன் வைத்திருக்கிறார். '22 ஆவது அரசமைப்புத் திருத்தம்' என்ற பெயரில் அது இப்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்டு, கடந்த 37 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்படாமல் வெறும்கருப்பு-வெள்ளைஎழுத்தில்பதியப்பட்டு கிடக்கும் அந்த விடயத்தை, வெறும் எழுத்தில் கூட விட்டு வைக்க பௌத்த - சிங்களப் பேரினவாதம் தயாரில்லை என்பதுதான் இதன் அர்த்தம்.

# காங்கிரஸின் வங்கிக் கணக்குகள் வருமான வரித்துறையால் முடக்கம்





தேசிய காங்கிரஸ் மற்றும் இளைஞர் காங்கிரஸின் வங்கிக் கணக்குகளை வருமான வரித் துறை முடக்கியுள்ளது.

மக்களவைத் தேர்தல் நெருங்கும் சூழலில், வருமான வரித் துறையின் இந்த நடவடிக்கை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் இந்திய இளைஞர் காங்கிரஸ் ஆகியவற்றின் வங்கிக் கணக்குகள் வருமான வரித் துறையால் முடக்கப்பட்டுள்ளன என காங்கிரஸ் பொருளாளர் அஜய் மாக்கன் தெரிவித்துள்ளார்.

2018- 2019 ஆம் ஆண்டுக்கான வருமான வரியைத் திரும்பச் செலுத்துவதில் 45 நாள்கள் காலதாமதம் ஏற்பட்டதால் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. 210 கோடி ரூபா அபராதமும் செலுத்த உத்தரவிட்டிருப்பதாக காங்கிரஸ் கூறியுள்ளது.

இது குறித்து பேசியுள்ள காங்கிரஸ் பொருளாளர் அஜய் மாக்கன்,

“காங்கிரஸ் கட்சியின் 4 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் நன்கொடை அளிக்கும் வகையில் உள்ள எங்களின் கிரவுட் ஃபண்டிங் வங்கி கணக்கும் முடக்கப்பட்டுள்ளது. இது காங்கிரஸின் கணக்கு முடக்கம் மட்டுமல்ல, ஜனநாயகத்தை முடக்குவதற்குச் சமம். தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாக இன்னும் ஒரு மாதமே உள்ள நிலையில், முக்கிய எதிர்க்கட்சியின் கணக்கை முடக்கி, நாட்டில் ஒற்றைக் கட்சி ஆட்சி அமைக்க திட்டமா?

வங்கிக் கணக்கை முடக்கியிருப்பதற்கு எதிராக, வருமான வரித் துறை ஆணையத்தில் மேல்முறையீடு செய்வோம். காங்கிரஸ் கட்சிக்கு தற்போது செலவு செய்யவோ, பில்களை செட்டில் செய்யவோ, ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கவோ நிதி இல்லை. ‘நியாய யாத்திரை’க்குச் செலவு செய்யக் கூட காசில்லை. அனைத்து அரசியல் செயல்பாடுகளும் பாதிக்கப்படும்” என்று அவர் வேதனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்திருக்கும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூனா கார்கே,

“நாட்டின் மிகப் பெரிய எதிர்க்கட்சியான தேசிய காங்கிரஸின் கணக்குகளை அதிகாரமிக்க மோடி அரசு முடக்கியுள்ளது. இது இந்திய ஜனநாயகத்தின் மீதான ஆழமான தாக்குதல். பா.ஜ.க. வசூலிக்கும், அரசியல் சட்டத்திற்குப் புறம்பான பணத்தை அவர்கள் தேர்தலுக்குப் பயன்படுத்துவார்கள். ஆனால் கட்சிக்காக கஷ்டப்பட்டு திரட்டப்பட்ட எங்கள் நிதிக்கு சீல் வைக்கப்படும். இதனால்தான், எதிர்காலத்தில் தேர்தலே வராது என கூறுகிறோம்.

இந்த நாட்டில் கட்சி அமைப்பு, ஜனநாயகத்தைப் பாதுகாக்க நீதித் துறையிடம் வேண்டுகோள் வைக்கிறோம். இந்த எதேச்சதிகாரத்துக்கு எதிராக களத்தில் இறங்கி கடுமையாக போராடுவோம்” என தன் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, “பிரதமர் மோடி பயப்பட வேண்டாம். காங்கிரஸ் என்பது பணப் பலத்தின் பெயர் அல்ல. மக்கள் பலத்தின் பெயர். சர்வாதிகாரத்தின் முன் நாங்கள் ஒருபோதும் பணிந்ததில்லை, தலை வணங்கவும் மாட்டோம். இந்தியாவின் ஜனநாயகத்தைக் காக்க காங்கிரஸ் போராடும்” என விமர்சித்துள்ளார்.

# மணிப்பூரில் மீண்டும் வன்முறை: இருவர் பலி, 25 பேர் படுகாயம்



மணிப்பூரில் குகி இனத்தை சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறையில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். 25 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

மணிப்பூரில் பெரும்பான்மையாக வசிக்கும் மைத்தேயி சமூகத்தினருக்கும் குகி பழங்குடியினருக்கும் இடையே கடந்த ஆண்டு மே மாதம் மோதல் ஏற்பட்டு பின்னர் அது இனக் கலவரமாக வெடித்தது. இந்த கலவரத்தில் இதுவரை 7 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். பலர் வீடுகளை இழந்து அகதிகளாகி உள்ளனர். கலவரங்களை கட்டுப்படுத்த அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டும் தொடர்ந்து அங்கு வன்முறைச் சம்பவங்கள் நீடித்தபடியே உள்ளன.

இந்த நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்பு குகி சமூகத்தைச் சேர்ந்த பொலிஸ் ஒருவர் ஆயுதம் தாங்கிய குழுக்களுடன் எடுத்துக் கொண்ட “செல்பி வீடியோ” ஒன்றை சமூக வலைதளங்களில் வைரலானது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சுராசந்த்பூர் பகுதியில் உள்ள எஸ்.பி. அலுவலகத்தை 300 இற்கும் அதிகமான குகி இன மக்கள் முற்றுகையிட்டனர். அவர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. பொலிஸார் மீது கற்களை வீசு போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தினர். பொலிஸ் வாகனங்களுக்கு தீவைக்கப்பட்டன. இந்த மோதலில் 2 பேர் உயிரிழந்தனர். 25 இற்கும் அதிகமானோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தை அடுத்து, சுராசந்த்பூர் பகுதி முழுவதும் இணைய சேவை துண்டிக்கப்பட்டுள்ளது.





# ரஷ்ய பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி சிறையில் மரணம்

சிறை வைக்கப்பட்டிருந்த ரஷ்யாவின் பிரதான எதிர்க் கட்சித் தலைவரான அலெக்ஸி நவால்னி உயிரிழந்துள் ளார்.

ரஷ்ய ஜனாதிபதியை விமர்சித்து வந்த எதிர்க்கட்சித் தலைவ ரான அலெக்ஸி நவால்னி, அரசுக்கு எதிராக செயற்பட்டார் என குற்றம் சாட்டப்பட்டு, 19 வருட கால சிறைத்தண்டனை அளிக்கப்பட்டு ரஷ்ய சிறைச்சாலைகளிலேயே மிகவும் மோசமானதாக கருதப்படும் ஆர்க்டிக் பீனல் காலனி எனும் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில், யமலோ-நெனெட்ஸ் மாவட்ட சிறைச் சாலை அதிகாரிகள், தற்போது 47 வயதாகும் அலெக்ஸி நவால்னி, சிறையில் மயக்கமடைந்தார் எனவும் அவசர மருத்துவ குழுவினர் விரைந்து வந்து அவரை காப்பாற்ற போராடியும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்து விட்டார் என்றும் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அலெக்ஸி நவால்னியின் உயிரிழப்பிற்கான காரணம் சரிவரத் தெரியவில்லை.

நவால்னியின் சட்டத்தரணி லியோனிட் சோலோவ்யோவ் இந்த தகவல் குறித்து விளக்கமளிக்க மறுத்துவிட்டார்.

நவால்னியின் செய்தித் தொடர்பாளர் கிரா யர்மிஷ், அவரது மரணம் குறித்து தங்களுக்கு இன்னும் எந்த உறுதியான தகவலும் கிடைக்கவில்லை என்று தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

மக்களை ஈர்க்கும் பிரசாரகராக பார்க்கப்பட்ட நவால்னி, 2018 ஆம் ஆண்டு ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்வந்தார்.

அதற்காக பிராந்திய அளவிலான பிரசார அலுவலகங் களை அவர் அமைத்தார். ஆனால், இறுதியில் அவர் வாக்களிக் கக் கூட தடை விதிக்கப்பட்டது.

கடந்த 2020 ஆம் ஆண்டு இவர் நரம்பு மண்டலங்களைப் பாதிக்கும் விஷ அமிலம் செலுத்தப்பட்டு, தாக்குதலுக்கு உள்ளானார்.

இதற்காக ஜெர்மனியில் சிகிச்சை எடுத்துக்கொண்ட அவர், அச்சுறுத்தல்களைத் தாண்டியும் 2021ஆம் ஆண்டு ஜனவரியில் மீண்டும் ரஷ்யாவிற்குள் நுழைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காசா மருத்துவமனைக்குள் இஸ்ரேல் படை ஒக்சிஜன் துண்டிப்பால் 4 நோயாளிகள் பலி



இஸ்ரேல் படைகள் தெற்கு காசாவின் பிரதான மருத்துவ மனையான நாசர் மருத்துவமனையில் சோதனை நடத்தி வரும் நிலையில், அங்கு மின்சாரம் தடைபட்டிருக்கிறது.

இதனால், ஒக்சிஜன் உதவியும் நிறுத்தப்பட்டதால் நான்கு நோயாளிகள் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் நிலையில், தெற்கு காசாவின் பிரதான மருத்துவ மனையான கான் யூனிஸ் நகரில் உள்ள நாசர் மருத்துவ மனைக்குள், ஹமாஸ் அமைப்பு ஊடுருவி உள்ளதாகவும், அங்கு இஸ்ரேல் பணயக்கைதிகளை மறைத்து வைத்திருப் பதாகவும், இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. ஆனால் ஹமாஸ் அமைப்பு இதனை மறுத்துள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் இராணுவப் படையினர் மருத் துவமனைக்குள் புகுந்து சோதனை நடத்தி வருகின்றனர்.

இது குறித்து காசா சுகாதாரத் துறை அமைச்சகம் சார்பில் கூறும்போது,

“மருத்துவமனை வளாகத்தில் உள்ள ஜெனரேட்டர்கள் நிறுத்தப்பட்டன, அதோடு மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. இதனால் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஒக்சிஜன் உதவி துண்டிக்கப்பட்டிருக்கிறது. இதனால் நோயாளிகள் பெரும் சிரமத்துக்கு ஆளாகியிருக்கின்றனர். தற்போது, நான்கு நோயாளிகள் உயிரிழந்தனர்.

மேலும், தீவிர சிகிச்சை பிரிவில் உள்ள நோயாளிகளின் நிலை, மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளின் நிலை கவலையளிக்கிறது” எனத் தெரி வித்தனர்.

முன்னதாக, மருத்துவமனையில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்களும், நோயாளிகளும் வெளியேற தனிப்பாதை ஒன்றை இஸ்ரேல் படைகள் திறந்திருந்தனர்.

இந்த தாக்குதலை தொடர்ந்து மருத்துவமனை வளா கத்தில் பதற்றம் நீடித்து வருகிறது என தெரிவிக்கப்பட்டு கிறது.



# யாழ். வந்த இந்தியத் தூதர் பல இடங்களுக்கு விஜயம்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றிருந்தார்.

காலை நயினாதீவுக்குச் சென்ற இந்தியத் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளில் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம் நாகதீப விகாரைக்கும் சென்ற தூதுவர் உள்ளிட்ட குழுவினர் அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை முன்னெடுக்கப்படுகின்ற காங்கேசன்துறை துறைமுகத்தையும் இந்தியத் தூதுவர் நேற்று பார்வையிட்டார்.

இதனையடுத்து, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்குச் சென்ற தூதுவர், விமான நிலையத்தின் செயற்பாடுகளையும் பார்வையிட்டார்.

இதனிடையே, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மன்னார் – தாழ்வுபாடு கடற்படை முகாமிலிருந்து கடற்படைப் படகில் ராமர் பாலம் அமைந்துள்ள பகுதிக்கு நேற்றுமுன்தினம் மாலை சென்றிருந்தார்.

ராமர் பாலத்தின் இரண்டாவது மணல் திட்டில் இந்தியத் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் வழிபாடுகளை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.











# பலாலி விமான நிலைய விரிவுபடுத்தலுக்காக 500 ஏக்கர் காணி சுவீகரிப்பு என்பது தவறாம்

## இந்தியத் தூதரைச் சந்தித்த பின் விக்னேஸ்வரன் தகவல்

(பிரபாகரன் டிலக்சன்)

பலாலி விமான நிலைய விரிவுபடுத்தலுக்காக மக்களின் 500 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்படவுள்ளதாக வெளியான செய்திகள் பொய்யானவை எனவும் அப்படி எந்த விதமான எண்ணமும் இந்தியாவிற்கு இல்லை எனவும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஸ்ரீ சந்தோஷ் ஜா தம்மிடம் தெரிவித்தார் என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய தூதுவர் ஸ்ரீ சந்தோஷ் ஜா தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகள் உள்ளிட்ட சிலரை நேற்று இரவு யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தியத் தூதுவருடன் பல கருத்துக்களை பரிமாறிக் கொண்டோம். நாங்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைந்தால் ஏனைய பிரச்சினைகள் தானாகவே தீர்த்துக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் அவருடைய எண்ணங்கள், கண்ணோட்டம், பேச்சுக்கள் இருப்பதை அவதானித்தேன்.

இந்தியாவையும் இலங்கையையும் பாலம் அமைத்து அதனூடாக ஓர் இணைப்பை ஏற்படுத்தல் சம்பந்தமாக இந்தியத் தூதுவர் குறித்த இடத்துக்கு சென்று பார்வையிட்டு வந்திருக்கின்றார். ஆகவே இலங்கை இந்திய தரைவழி இணைப்பு சம்பந்தமான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என நம்புகின்றேன்.

பத்திரிகைகளில் 500 ஏக்கரை காணிகள் சுவீகரிக்கப் போவதாக வெளியான செய்திகள் எமக்கு பேரதிர்ச்சியை தந்ததையும் நான் இந்தியத் தூதுவருக்குச் சுட்டிக் காட்டினேன்.

விமான நிலையத்தின் அபிவிருத்திக்கு தற்போது விமான நிலையத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகளே போதுமானவை என்பதை இந்தியத் தூதவரிடம் நான் தெளிவுபடுத்தியிருந்தேன்.

பலாலி விமான நிலைய விரிவுபடுத்தல் சம்பந்தமாக மக்களின் 500 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்படவுள்ளதாக வெளியான செய்திகள் பொய்யானவை என தூதுவர் சந்தோஷ் ஜா என்னிடம் தெரிவித்திருந்தார். அப்படி எந்தவிதமான எண்ணமும் தமக்கு இல்லை எனவும் இந்தியா அரசாங்கத்திடம் எதுவிதமான காணிகளை பெற்றுத்தருமாறு கோரவில்லை எனவும் அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

மேலும் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் கண்டால் தமிழ் மக்களுடைய வாழ்வாதாரம் முன்னேற்றம் அடையும். அவர்களுக்கான வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். அரசியல் ரீதியாகவும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இந்தியத் தூதுவர் தெரிவித்தார். – என்று கூறினார்.

# வெளிநாடுகளுடன் கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கையை விரைவுபடுத்த முடிவு

சில நாடுகளுடன் இணைந்து கைதிகள் பரிமாற்றத்தை மேற்கொள்வதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நடவடிக்கை விரைவுபடுத்தப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த உடன்படிக்கையின் ஊடாக வெளிநாடுகளில் கைது செய்யப்படும், நாட்டில் தேடப்படும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள குற்றவாளிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான இயலுமை ஏற்படும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தற்போது சில நாடுகளுடன் இணைந்து அத்தகைய உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்றும், மேலும் சில நாடுகளுடன் இணைந்து விரைவில் கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கைகளில் கைச்சாத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சால் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பதில் பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.

நாட்டில் பல்வேறு குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய பிரபல வர்த்தகர்கள் 42 பேர் தற்போது வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் டுபாயில் வசித்து வருகின்றனர்.



ஏனையோர் இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தலைமறைவாகியுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

இவர்களைக் கைது செய்வதற்காக சர்வதேச பொலிஸார் ஊடாக சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாகப் புலனாய்வுத் தகவல்கள் பெறப்படுகின்றன என்றும் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மேலும் தெரிவித்துள்ளார்.

# நிறைவேற்று அதிகாரம் இலங்கையின் சாபக்கேடு

## சபா. குகதாஸ் சாடல்




நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசமைப்பு நாட்டின் சாபக்கேடு என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா. குகதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளதாவது:-

"1978 ஆண்டு இரண்டாம் குடியரசு அரசமைப்புடன் கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைதான் இந்த நாடு இவ்வளவு தூரம் பாரிய பின்னடைவைச் சந்திப்பதற்குக் காரணமானது.

இந்த உண்மை தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகளாலும் ஜனாதிபதி வேட்பாளர்களினாலும் பேசு பொருளாக இருந்தாலும் ஆட்சிக்கு வந்தவுடன் மேலதிக நிறைவேற்று அதிகாரங்களைப் பலப்படுத்துவதில் ஜயவர்த்னாவில் இருந்து கோட்டாபய வரை குறியாக இருந்துள்ளனர்.

இலங்கைத்தீவில் வாழும் சகல இனங்களுக்கும் நியாயமான அதிகாரப் பகிர்வு கிடைப்பதற்குத் தடையாக இருப்பது இந்தச் சர்வதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமைதான். அத்துடன் கடந்த காலத்தில் நாடு பெரும் யுத்த அழிவுகளையும், இனங்களிடையே குரோத எண்ணங்கள் மேலோங்குவதற்கும் இனங்களிடையே சந்தேகங்கள், பயங்கள் ஏற்படுவதற்கும் காரணமானது.

தமிழர்களின் அரசியல் அதிகாரங்கள், இருப்புக்கள் பறிபோவதற்கும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு எதிரான சக்திகளைத் தமிழர் தரப்புக்குள்ளேயே உருவாக்கி மேலோங்கச் செய்வதில் பக்க பலமாக இருந்தது - இருப்பது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையே ஆகும்.

நாட்டில் அதிகார துஷ்பிரயோகம், சுயாதீன ஆணைக்குழுக்கள் சுயாதீனத் தன்மையை இழத்தல், மாகாணங்கள் ஆளுநர்களால் ஜனாதிபதிமாரின் எண்ணங்களுக்கு ஏற்ப ஆழப்படுதல் , தேசியக் கொள்கைகள் ஆட்சிகள் மாற நிலையான தன்மையை இழத்தல், அயல் உறவுக் கொள்கைகள் மாற்றம் அடைதல் போன்றன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையால் நாட்டை மிகப் பெரும் பாதிப்புக்குள்ளாக்கியதுடன் உள்நாட்டு அரசியல் அமைதியின்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே, நாட்டின் நிரந்தர அமைதிக்கும் நிலையான அபிவிருத்திக்கும் இனங்களிடையே நல்லிணக்கத்துக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசமைப்பு நீக்கப்பட்டு அதிகாரப் பகிர்வுடன் கூடிய அரசமைப்பே அவசியம்." - என்றுள்ளது.




# நுவரெலியாவில் நடுவீதியில் குடைசாய்ந்து லொறி விபத்து

(நானுஓயா நிருபர்)

நுவரெலியாவில் இருந்து கண்டி நோக்கிச் சென்ற லொறி ஒன்று நேற்று விபத்துக்குள்ளானது.

நுவரெலியா - கண்டி பிரதான வீதியில் கொண்டக்கலை பகுதியில் லொறி வீதியை விட்டு விலகி குடைசாய்ந்தது என்று நுவரெலியா போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியாவில் தொடர்ந்து நிலவும் சீரற்ற காலநிலையால் சாரதியின் கட்டுப்பாட்டை மீறி வாகனம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

குறித்த லொறியில் சாரதியும், உதவியாளரும் பயணித்தனர் என்றும், எனினும் அவர்கள் சிறு காயங்களுடன் பாதுகாப்பாக உயிர் தப்பினர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இடத்தில் இதற்கு முன்னரும் பல விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# மலையக மக்களுக்கான சமூக நீதி உடன்பாடு: ரணில், அநுரகுமாரவின் நிலைப்பாடு என்ன?

## மனோ கணேசன் எம்.பி. கேள்வி



“நாட்கூலி தொழிலாளர் என்ற தாழ்நிலை நிலையில் இருந்து, பெருந்தோட்ட மக்களை நிலவுரிமை கொண்ட தொழில் முனைவோராக மாற்றுவோம்” என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மீண்டும் ஒருமுறை பகிரங்கமாக கூறி எம்முடன் உடன்பாட்டில் கையெழுத்து இட்டுள்ளார். இது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தூரநோக்கு சிந்தனையின் வெற்றி.”

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

“ஐக்கிய மக்கள் சக்தி அரசு உருவாகுமானால், அப்போது, எமது மக்கள் தொடர்பாக முன்னெடுக்கக்கூடிய நலவுரிமை திட்டங்கள் என்ன என்பது பற்றிய எழுத்து மூலமான உள்ளக சமூக நீதி உடன்பாடு இதுவாகும். இது தேர்தல் ஒப்பந்தம் அல்ல. தேர்தல் ஒப்பந்தம், தேர்தல் வரும்போது வரும்” – என்றும் மனோ கணேசன் கூறியுள்ளார். .

“தேசிய அளவில் நடந்துள்ள இந்த நிகழ்வு பற்றி கேள்வி எழுப்பும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.க. கூட்டணி, அநுரகுமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி தரப்புகளுக்கு எமது இந்தச் சமூக நீதி உடன்பாடு விபரங்களை அனுப்பி வைக்க நாம் தயார். அவர்களது பதில் நிலைப்பாடுகள் என்ன என அவர்கள் எமக்கு அறிவித்தால் அவை பற்றியும் கலந்தாலோசிக்க நாம் தயார். ரணிலும், அநுரவும் தயாரா?” – என்றும் மனோ எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த நாட்டில் வாழும் 15 இலட்சம், மலையகத் தமிழ் மக்கள் என்ற இன அடையாளத்துக்குள், சரிபாதி ஜனத்தொகை இன்னமும் பெருந்தோட்டங்களில் வாழ்கிறார்கள். இந்த நாட்டின் ஏனைய மக்களுடன் ஒப்பிடும் போது, இந்தப் பெருந்தோட்ட மக்கள், சமூக பொருளாதார வளர்ச்சியில் இந்நாட்டிலேயே பின்தங்கியவர்கள். இதற்குக் காரணம், மலைநாட்டு அரசியல்வாதிகள் மட்டுமே என்ற கவர்ச்சிக்கரமான பிரசாரம் முன்னேடுக்கப்படுகின்றது. இது வரலாற்றை திட்டமிட்டு மூடி மறைக்கும் சூழ்ச்சி. இந்தக் கண்ணாம்பூச்சி கவர்ச்சி கதையில் நாம் மயங்கி விடக்கூடாது. மலைநாட்டு அரசியல்வாதிகள் மீது பெரும் குற்றச்சாட்டுகள் உள்ளன. அவற்றில் உண்மைகளும் உள்ளன. ஆனால், எமது மக்களின் குறை வளர்ச்சிக்கு முதல் மூன்று காரணங்கள், பேரினவாதம், இந்திய அரசு, இங்கிலாந்து அரசு ஆகியவை ஆகும்.

சுதந்திரம் பெற்றவுடன் எமது குடியுரிமை, வாக்குரிமைகளை பறித்து எமக்கு இன்று காணி, கல்வி, சுகாதாரம் ஆகிய உரிமைகள் முழுமையாக இல்லாமல், எம்மை பெருந்தோட்ட அமைப்புக்குள்ளே இரண்டாந்தர பிரஜைகளாக வைத்திருப்பது, பேரினவாதம் ஆகும். எம்மை கேட்காமலே, எம்மில் பெரும்பான்மையோரை நாடு கடத்தி, எம்மை அரசியல் ரீதியாக பலவீனப் படுத்தியது, இந்திய அரசு ஆகும். எம்மை இங்கே அழைத்து வந்து, எமது உழைப்பில் நன்கு சம்பாதித்து விட்டு, எம்மை அம்போ என விட்டு ஓடியது, இங்கிலாந்து அரசு ஆகும். இந்த வரலாற்றால், ஏற்பட்டுள்ள, தாழ்நிலைமைகளில் இருந்து வெளியே வருவது சுலபமான காரியம் அல்ல.

இந்த மூன்றுக்கும் பிறகுதான், மலைநாட்டு அரசியல் கட்சிகளின் பொறுப்பு வருகின்றது. அதிலும், தமிழ் முற்போக்குக் கூட்டணி, எட்டு ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டு, ஒரே ஒருமுறை மட்டும் ஆட்சியில் இருந்த முற்போக்கு அரசியல் இயக்கம் ஆகும். தேசிய, சர்வதேசிய அரங்குகளில் எமது பிரச்சினைகளை காத்திரமாக எடுத்து பேசி, முன் வைத்து, தீர்வு தேடும் இயக்கம், எமது கட்சியாகும். அதன் ஒரு அங்கம்தான், “நாட்கூலி தொழிலாளர் என்ற தாழ்நிலை நிலையில் இருந்து, பெருந்தோட்ட மக்களை நிலவுரிமை கொண்ட தொழில் முனைவோராக மாற்றுவோம்” என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை மீண்டும் ஒருமுறை பகிரங்கமாகக் கூறவைத்தது, நாம் செய்துகொண்டுள்ள சமூக நீதி உடன்பாடாகும்.” – என்றார்.

# வவுனியாவில் கிணற்றில் இருந்து இளம் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!





**(வசந்தன்)**

வவுனியா, வீரபுரம் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து இளம் குடும்பஸ்தரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது என்று செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம், வீரபுரம் பகுதியில் வசிக்கும் இளம் குடும்பம் ஒன்றுக்குள் ஏற்பட்ட வாய்தர்க்கத்தை யடுத்து கணவனான இளம் குடும்பஸ்தர் வீட்டில் இருந்த கிணற்றுக்குள் குதித்துள்ளார்.

இதையடுத்து மனைவியும், பிள்ளைகளும் அயலில் உள்ளவர்களை அழைத்து மீட்க முயற்சித்தனர். இதன்போது கிராம அலுவலர் மற்றும் பொலிஸாருக்கும் அயலவர்கள் முறைப்பாடு செய்தனர்.

அப் பகுதி மக்களின் துணையுடன் அவர் மீட்கப்பட்ட போதும், அவர் உயிரிழுந்த நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளார்.சடலம் செட்டிகுளம் வைத்திய சாலையில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டது. அதன்பின்னர் சடலம் அங்கிருந்து பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக் கப்பட்டது.

சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான 33 வயதுடைய செபமாலை மொறிசன் என்பவரே மரணமடைந்தவராவார். இது தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.

# காணித் தகராறுகளை மத்தியஸ்த சபையில் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுப்பு!

## அமைச்சர் விஜேதாஸ தெரிவிப்பு

வடக்கு கிழக்கில் இடம்பெற்றுவந்த காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்த சபை முறைமை ஊடாக நடவடிக்கை எடுத்தது போன்று ஏனைய மாவட்டங்களில் இடம்பெறும் காணிப் பிரச்சினைகளை மத்தியஸ்த சபை முறைமையினூடாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இவ்வாறு நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

1988 ஆம் ஆண்டு மத்தியஸ்த சபை சட்டத்தின் ஊடாக மத்தியஸ்த சபை ஆணைக்குழு அமைக்கப்பட்டதன் பின்னர் 2015 ஆம் ஆண்டாகும் போது இலங்கைக்குள் இடம்பெற்று வந்த வழக்கு நடவடிக்கைகளில் சுமார் நூற்றுக்கு 47 வீதம் தீர்த்துக்கொள்ள முடிந்துள்ளது.

அத்துடன் மத்தியஸ்த சபை முறைமையில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பின் ஊடாக தற்போது வழக்கு தீர்க்கும் வீதம் சுமார் நூற்றுக்கு 70 வீதம்வரை



அதிகரித்துள்ளது.

அத்துடன், நீதிமன்றங்களில் இடம்பெற்றுவரும் வழக்கு விசாரணைகள் தாமதிப்பது, நீதிமன்றம் தொடர்பான நம்பிக்கை குறைவடைவதற்கு ஒரு காரணமாகும். அதனால் வழக்கு விசாரணைகள் தாமதமாவதை தவிர்த்துக் கொள்வதற்கான ஒரு நடவடிக்கையாக மத்தியஸ்த சபை முறைமையை விரிவுபடுத்துவது காலத்தின் தேவையாகும்.

மேலும் 5 லட்சம் ரூபா பெறுமதியான வழக்கு விசாரணைகளை தீர்ப்பதற்காக மத்தியஸ்த சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரம் தற்போது 10 லட்சம் ரூபா வரை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன் மூலம் நிதி தொடர்பான சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள இருக்கும் இயலுமை விரிவாக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு மேலதிகமாக விசேடமாக வடக்கு கிழக்கி மாகாணங்களில் பாரியளவில் காணி தகராறு இடம்பெறுவதால் அதற்காக இந்த இரண்டு மாகாணங்களுக்கும் தனியான காணி மத்தியஸ்த சபை முறையை அறிமுகப்படுத்தி இருந்ததுடன் அது மிகவும் வெற்றிகரமான முறையில் செயற்படுத்தப்பட்டது. அதனால் மேலும் 16 மாவட்டங்களுக்கு இந்த காணி மத்தியஸ்த சபை முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

இதன் காரணமாக நிதிமன்றங்களில் வழக்கு விசாரணைக்கு இருந்த பாரியளவிலான தகராறுகளை சமரசம் செய்து கொள்ள முடியுமாகியுள்ளது. அதே போன்று இதன் காரணமாக நீதிமன்றங்களில் குவியும் வழக்கு விசாரணைகளை குறைத்துக் கொள்ளவும் மத்தியஸ்த சபை முறைமை ஊடாக முடிந்துள்ளது.

மேலும் நீதிமன்றங்களில் இருந்து வரும் 20 லட்சம் ரூபா பெருமதிக்கு குறைவான வழக்கு விசாரணைகளை தனியான நீதிமன்றம் ஒன்றில் விசாரணை செய்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதன் காரணமாக மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்றங்களில் தேங்கி இருக்கும் இவ்வாறான வழக்கு விசாரணைகளை விரைவில் விசாரித்து முடிவுக்குக் கொண்டுவர முடியும். அல்லது மத்தியஸ்த சபைக்கு இந்த விசாரணைகளை அனுப்பி அங்கு சமரசம் செய்து வைப்பதன் மூலம் இந்த பிரச்சினைகளுக்கு விரைவாக தீர்வுகாண முடியும்.- என்றார்.




### இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி

# பலஸ்தீன அரசை அமைக்க இலங்கை ஆதரவளிக்கும்!

### இஸ்ரேல் அமைச்சரிடம் ரணில் தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இஸ்ரேலின் போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு அமைச்சர் பிரிகேடியர் ஜெனரல் மிரி ரெகேவ்வுக்கும் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஹமாஸ் போராளிகளால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ள இஸ்ரேலியர்களை மீட்பதற்கு இலங்கை தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கும் என்றும், காஸா பகுதியில் இடம்பெறும் மோதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் இதன்போது குறிப்பிட்டார்.

இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி பலஸ்தீன அரசை அமைப்பதற்கு இலங்கை ஆதரவளிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் சர்வதேச அலுவல்கள் பணிப்பாளர் தினுக் கொழும்பகே ஆகியோரும் கலந்துகொண்டனர்.








# சுகாதார தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தம் நியாயமற்றது

## நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக்குழுவின் தலைவர் ஜகத் குமார சுமித்ராராச்சி எம்.பி. சீற்றம்

“பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவை அரசு வழங்கியுள்ளது. எனவே, சுகாதார தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தம் நியாயமற்றது.”

– இவ்வாறு பகிரங்க மற்றும் பொறுப்புக்கூறலுக்கான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக்குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராராச்சி தெரிவித்தார்.

அத்துடன், மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் வகையில் வேலைநிறுத்தங்களை மேற்கொள்வது நியாயமற்ற செயல் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் பிரதிநிதிகளைத் தூற்றுவதால் மாத்திரம் நாட்டைக் கொண்டு செல்ல முடியாது என்றும், அரச அதிகாரிகள் செயல்திறனுடன் மக்களுக்கு சேவை வழங்கக் கடமைப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

“அரச நிறுவனங்களுக்குள் பெருமளவான அதிகாரிகள் மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குகின்றனர். ஆனால், சில அதிகாரிகள் பொறுப்பற்ற விதத்தில் செயல்படுவது தெரிய வந்துள்ளது. மக்களுக்கான சேவைகள் உரிய வகையில் வழங்கப்படுவதில்லை என்பதையும் காண முடிகின்றது. சில நேரங்களில் அரச சேவைகளின் நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள் வழங்கப்படாமல் இருப்பதற்கும் அரச அதிகாரிகள் சிலரது செயல் திறனற்ற செயற்பாடுகளே காரணமாக உள்ளன.

அரசியல் அதிகாரத்துக்குள் காணப்படும் பிழைகளை அவர்கள் சுட்டிக்காட்டினாலும், உயர் மட்ட அதிகாரிகள் சிலர் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகின்றனர். அரசியல்வாதிகளை தூற்றுவதால் மாத்திரம் நாட்டை கொண்டுச் செல்ல முடியாது. அரச அதிகாரிகள் தமது தனிப்பட்ட நோக்கங்களுக்காகச் செயற்படவும் முடியாது.

நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுக்களுக்கு அழைக்கப்படும் போதும் சில அதிகாரிகள் தமக்கு எவ்வித பொறுப்புக்களும் இல்லையென கூறி அழைப்பைப் புறக்கணிக்கின்றனர். சுயாதீன ஆணைக்குழுக்களும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டுமென அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான நிலையிலும் மக்கள் உரிமைகள் பெருமளவில் மீறப்படுகின்றது.

சிறந்த செயலாற்றுவதற்கு வெளிப்படையானதும், நேர்மையானதுமான அரச சேவையொன்று அவசியமாகும்.

தற்போதைய நிலைமைகளுக்கு தீர்வுகளைத் தேடும் வகையில் எதிர்வரும் 19 ஆம் திகதி சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றத்தில் அமைச்சுகளின் செயலாளர், மாகாண, மாவட்ட, பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட மக்களுடன் நெருக்கமாகப் பணியாற்றும் அதிகாரிகளுக்கான விசேட செயலமர்வொன்றை நடத்த தீர்மானித்துள்ளோம். அதன்போது மக்களுக்கு செயல்திறனுடனும், சிநேகபூர்வமானதுமான சேவையை எவ்வாறு வழங்க முடியும் என்பது குறித்து விளக்கமளிக்கப்படவுள்ளது.

அதேபோல் நெருக்கடியிலிருக்கும் காலத்திலும் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள அதிகரிப்பை அரசு பெற்றுக்கொடுத்தது. அவ்வாறிருந்தும் மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் வகையில் வேலை நிறுத்தங்களை செய்வதை அனுமதிக்க முடியாது. தொழிற்சங்கத் தலைவர் என்ற வகையில் இவ்வாறான வேலைநிறுத்தங்கள் கண்டிக்கத்தக்கவை.”

– என்றார்.




# 11 புரதான தலங்கள் புனித பூமியாக அறிவிப்பு

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக் களத்தினால் அரச வர்த்தமானியின் ஊடாக தொல்லியல் சிறப்புமிக்க 11 வழிப்பாட்டுத் தலங்கள் புனித பூமியாக பெயரிடப்பட்டுள்ளன.

அந்தப் பகுதிகளை புனித பூமியாக பெயரிடுவதற்கான சன்னஸ் பத்திரங் களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலை மையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அதற்கமைய அனுராதபுரம் ஹொரவ்பொத்தான பிரதேச செயலக பிரிவின் அம்பகஸ்வெவ புராதன விகாரை, புத்தளம் தங்கொட்டுவ பிரதேச செயலக பிரிவின் பொதுவடன புராதன விகாரை, அம்பாறை பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முஹுது மகா விகாரை, கம்பஹா மாவட் டத்தின் தொம்பே பிரதேச செயலகத் துக்குச் சொந்தமான மெத்தேகம விகாரை, அம்பாந்தோட்டை உத்தகந்தர விகாரை, திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலகத்தின் ஸ்ரீ சத்தர்ம யுக்திக ஆசிரமம், குருநாகல் நாரம்மல பிரதேச செயலகத்தின் தம்பதெனிய விஜய சுந்தராராம விகாரை, குச்சவெளி பிரதேச செயலகத்தின் சாந்தி விகாரை, குருநாகல் குளியாபிட்டிய மேற்கு பிரதேச செயலகத்தின் ஸ்ரீ சுதர்மாராம புராதன விகாரை, கம்பஹா சித்த கபலே மல் சூனியம் தேவாலய, குச்சவெளி பிரதேச செயலகத்தின் யான் ஓயா விகாரை, சாகர புர சுமுதுகிரி வன



ஆசிரமம் உள்ளிட்ட தலங்களே புனித பூமிகளாகப் பெயரிடப்பட்டிருக்கின்றன.

அதற்கமைய தற்போது வரையில் நாட்டின் 142 வழிபாட்டுத் தலங்கள் புனித பூமிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்போது புத்த சாசனத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசமைப்புக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்படுவார் என்று ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வழிக்காட்டலின் கீழ் அரசு புத்த சாசனத்தின் மேம்பாட்டுக் காக முன்னெடுத்துவரும் முயற்சிகள் குறித்து தெளிவூட்டிய ஜனாதிபதியின் செயலாளர், தேரவாத பௌத்த மத்தி யஸ்தானமான மகா விகாரையின் ஆய் வுப் பணிகளை ஆரம்பிக்கவும், மகா விகாரை பல்கலைக்கழகத்தை ஆரம்பிக் கவும், கண்டி சர்வதேச பௌத்த அருங் காட்சியகத்தை நிர்மாணிப்பதற்கு அவ சியமான திட்டங்களை வழங்கியுள்ள தாகவும் தெரிவித்தார்.

வித்யோதய பிரிவெனாதிபதியும் காலி பிரதான சங்கநாயக்கருமான வண. பலாங்கொட சோபித தேரர், ஸ்ரீ லங்கா அமரபுர மஹா பீடத்தின் மகா நாயக்க தேரர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல் கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரை யாளருமான கந்துனே அஸ்ஸபி மகா நாயக்க தேரர், ராமக்ஞ மஹா பீடத்தின் மேல் மாகாணத்துக்கான பிரதான சங்க நாயக்கர் பேராசிரியர் வண. மெதகம நந்தவங்ச நாயக்க தேரர் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டி ருந்தனர்.

இராஜாங்க அமைச்சர் சாந்த பண் டார, நாடாளுமன்ற உறுப்பினர் சமன் பிரிய ஹேரத், புத்த சாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சின் செயலா ளர் சோமரத்ன விதானபத்திரன, பௌத்த அலுவல்கள் பணிப்பாளர் நாயகம், பௌதீகத் திட்டமிடல் திணைக் களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் சன்னஸ் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள அழைக்கப்பட்டவர்க ளும் இதன்போது கலந்துகொண்டி ருந்தனர்.

புனித பூமி சன்னஸ் பத்திரங்களை வழங்குவதற்கு முன்னதாக இந்த நிகழ் வுக்கு வருகை தந்திருந்த மகா சங்கத்தினரால் ஜனாதிபதி செய லகத்தில் புண்ணியகர்ம பூஜைகளையும் நிகழ்த்தினர்.






# கிராம மக்களின் நலன் கருதி நடமாடும் கண் பரிசோதனை

(அபு அலா)

கிராமப் புறங்களில் வாழும் மக்களின் நலன் கருதி, கொழும்பு கண் பரிசோதனை நிலையத்தால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்பரிசோதனை நடமாடும் சேவை நேற்று (16) திருகோணமலை கோபாலபுர முஹைதீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

கொழும்பு கண்பரிசோதனை நிலையத்தின் கண்பரிசோதனை வைத்தியர் ஆர்.அருன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த நடமாடும் கண்பரிசோதனையில் கண்பார்வை குறைபாடு, குறும்பார்வை குறைந்தவர்கள், கண் நோய் சம்மந்தப்பட்டவர்கள், தலைவலி மற்றும் கண்ணில் நீர் வடிதல், கண் கூச்சம் போன்ற கண்நோய் உள்ளவர்கள் தங்களின் கண்களை சிறந்த முறையில் பரிசோதனை செய்து கொண்டனர். அவர்களுக்கான மூக்குக் கண்ணாடியையும் பெற்றுக் கொண்டனர்.



குறிப்பாக, பாடசாலை மாணவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டு அவர்களுக்கான கண்பரிசோதனைகள் இடம்பெற்றன. மூக்குக் கண்ணாடியும் வழங்கப்பட்டன.

# அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு நிலையத்தில் யானைகள்!

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மீள்சுழற்சி நிலைய பகுதியில் மலைபோல் குவிந்துள்ள குப்பைகளை உண்ண யானைகள் தினமும் படையெடுத்து வருகின்றன.

இவ்வாறு வரும் யானைகள் சில அருகில் உள்ள பொது மக்களின் சொத்துக்களுக்கும் சேதங்களை விளைவிப்பதால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தக் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த யானை வேலிகள் அமைப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் யானைகள் அத்துமீறி வீதிகள் பயிர் நிலங்களை நோக்கி வருகை தருகின்றன.

அம்பாறை நகரில் இருந்து குப்பைகள் வாகனங்கள் மூலம் தினமும் கொண்டுவரப்பட்டு இங்கு கொட்டப்படுகிறது. மலைபோல் குவிந்துள்ள குப்பைகளை யானைகள் தினமும் உண்ண வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பெருமளவான காட்டு யானைகள் குப்பை மேடுகளை தேடி உணவுக்காக வருகின்றன. தாவர உண்ணியான காட்டு யானைகள், குப்பைகள், பொலீத்தீன்கள், பிளாஸ்ரிக் பொருள்கள் உள்ளிட்ட கழிவு பொருள்களை உட்கொள்வதால் யானைகளின் இறப்பு வீதம் அதிகரித்து வருகின்றது.

அண்மைக் காலங்களில் யானை – மனித மோதலால் மனிதர்கள் உயிரிழப்பதும் அதிகரித்துள்ளது.

அத்துடன் யானை – மனித மோதலால் அதிக மனித உயிரிழப்புக்கள் இடம்பெறும் நாடுகளில் இரண்டாவதாக



இலங்கை காணப்படுகிறது.

யானை – மனித மோதலைக் குறைப்பதற்குப் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் அவற்றை முறையாக அமுல்படுத்தப்படாமை மற்றும் மேற்பார்வை செய்யப்படாமை காரணமாக யானை – மனித மோதலின் இழப்புக்களை குறைப்பது இன்று வரையும் முடியால் உள்ளது.

மனிதன் மற்றும் யானைகளைக் காப்பாற்றவும் சொத்துக்களைப் பாதுகாக்கவும் உடனடியாக தேசிய வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டியது அரசின் கடமையாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தொடர்ச்சியாக யானை மற்றும் மனித மரணங்கள் நிகழ்ந்து வந்தாலும் அவற்றினை நிவர்த்திப்பதற்கு அல்லது குறைப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

# நாவலர் விழாவும் பரிசளிப்பு விழாவும்

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நாவலர் விழாவும் பாலர் பாடசாலை மாணவர்களின் பரிசளிப்பு விழாவும் நாளை (18) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் கணேசரத்தினம் ஆதித்தனும் சிறப்பு விருந்தினராக அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் பண்டிதர் சைவப்புலவர் செ.த.குமரனும் கலந்துகொள்வர். நாவலர் நினைவுரையைச் சைவப் புலவர் செ.த.குமரன் ஆற்றவுள்ளார். மாணவர்களின் கலை நிகழ்வும் பரிசளிப்பும் இடம்பெறும்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.02.2024




இன்று சில அசௌகரியங்களை சந்திக்க நேரும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். திட்டமிட்டு செயலாற்றினால் நல்ல விளைவுகளை எதிர்பார்க்கலாம்.

இன்று பணிச்சுமைக்கு ஆளாகலாம். கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பது சாத்தியமில்லை.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் சண்டை ஏற்படும். தவறான புரிந்துணர்வு ஏற்படும் நல்லிணக்கத்தை பராமரிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று வீணான செலவுகள் செய்ய நேரிடும். உங்கள் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் கண்களில் எரிச்சல் ஏற்படலாம். கண்களுக்கு தக்க மருந்துகள் பயன்படுத்தி கவனமாக பாதுகாக்க வேண்டும்.




இன்று புத்திசாலித்தனமாக திட்டமிட வேண்டியது அவசியம். சில சமயங்களில் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். என்றாலும் அமைதியான சாந்தமான அணுகுமுறை உங்களுக்கு தேவை.

கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க முடியாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முறையாக திட்டமிட்டால் சிறப்பாக செயலாற்ற முடியும்.

உங்கள் துணையுடன் அதிகமாக உணர்ச்சிவசப் படுவீர்கள். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

கடன் வாங்க நேரலாம். அதிக செலவினங்களால் கடன் வாங்க நேரிடும்.

உங்கள் தாயாருக்கு ஒவ்வாமை ஏற்படும். அதன் காரணமாக நீங்கள் பணம் செலவு செய்ய நேரிடலாம்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். என்றாலும் பிரார்த்தனை, மந்திர ஜபம் போன்ற பக்தியான விஷயங்களில் ஈடுபடுவது அமைதியையும் ஆறுதலையும் கொடுக்கும்.

இன்று பணிச்சுமை காணப்படும். முறையான திட்டமிடல் மூலம் இன்று நீங்கள் நற்பலன்களைப் பெறலாம்.

காரணமின்றி உங்கள் துணையிடம் குற்றம் கண்டு பிடிப்பீர்கள். நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் தேவைகளை சமாளிப்பதையே கடினமாக உணர்வீர்கள்.

பல்வலி உபாதைக்கான வாய்ப்பு உள்ளது. உணவில் கவனம் தேவை. இனிப்புப் பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும்.




இன்றையநாள் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உறுதி வெற்றியை பெற்றுத்தரும். மனதில் நம்பிக்கை நிறைந்து இருப்பதன் காரணமாக விரைந்து முடிவெடுப்பீர்கள்.

உங்கள் பணியில் மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும். உங்கள் சகபணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். அலுவலகத்தில் நடக்கும் மகிழ்ச்சியான நிகழ்வுகளில் கலந்து கொள்வீர்கள்.

வீட்டில் நடக்கவிருக்கும் ஒரு விசேஷம் பற்றி உங்கள் துணையிடம் கலந்தாலோசிப்பீர்கள். இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த உதவும். பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். உங்களுக்கு பிரியமானவரின் விசேஷத்துக்காக நீங்கள் செலவுகளைச் செய்ய நேரலாம். உங்களின் மனஉறுதி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று புதிய வாய்ப்புகள் உங்களைத் தேடிவரும். நம்பிக்கையுடன் முயன்றால் நல்ல பலன்கள் கிடைக்கும். ஆழ்ந்த திருப்தியை உணர்வீர்கள்.

உங்கள் பணிகளை நேர்மையான முயற்சியுடனும் அர்ப்பணிப்புடனும் செய்வீர்கள். சிக்கலான பணிகளையும் சாதாரணமாக செய்து வெற்றி பெறுவீர்கள். அலுவலக பயணம் சம்பந்தமாக உங்கள் துணையுடன் கலந்தாலோசிப்பீர்கள். இருவரும் நல்ல தருணங்களை உங்களுக்குள் பகிரந்து கொள்ள இத்தகைய பயணங்கள் உதவிகரமாக இருக்கும்.

கணிசமான தொகை கிடைக்கும். குடும்பத்திற்கான பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள். உங்களின் சாதாரண போக்கால் ஆரோக்கியத்தை நல்லமுறையில் வைத்திருப்பீர்கள்.




உங்கள் வளர்ச்சி குறித்த கவலை இன்று காணப்படும். தடைகளை எதிர் கொள்வது கடினமாக உணர்வீர்கள். எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. இன்று நீங்கள் தவறுகள் செய்ய வாய்ப்பு உள்ளது.

சகபணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. பொறுமையுடன் சிறப்பாக கையாண்டால் சூழ்நிலையை சமாளிக்கலாம்.

உங்கள் துணையுடன் உங்கள் மனதில் உள்ள பிரச்சினைகளை வெளிப்படையாகப் பேசுவது நல்லது. இது உங்கள் பிரச்சினைகளை தீர்க்க உதவும்.

செலவினங்கள் அதிகமாக காணப்படுகின்றன. கையிலிருக்கும் குறைந்த பணத்தைக் கொண்டு சேமிப்பதென்பது கடினமாக இருக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லை. அன்றாட அலுவல்களை கவனமுடன் செய்ய வேண்டும். பேசுவதற்கு முன் யோசித்து பேச வேண்டும். பிரார்த்தனை உங்களுக்கு ஆறுதல் அளிக்கும்.

இன்று பணிச் சூழல் சாதகமாக காணப்படும். உங்கள் கடின முயற்சி மூலம் வெற்றி பெறுவீர்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்ட கடினமான பணிகளை எளிதாக கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வது நல்லது. உணர்ச்சிவசப்படுதலை தவிர்த்து சமநிலையான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.

பணவரவு குறைந்து காணப்படும்.




இன்று நற்பலன்கள் ஏற்படும். உங்கள் முயற்சிகள் நல்லபலனையும் திருப்தியையும் ஏற்படுத்தும். உங்கள் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் பலவீனங்களை அறிந்து பணியாற்றினால் உங்கள் செயலதிறன் மேம்படும். பணியில் உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

மகிழ்ச்சியுடன் பேசுவதன் மூலம் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

தொலைதூரத்திலிருந்து வரவேண்டிய நீண்ட கால நிலுவைப் பணம் வந்து சேரும். வங்கியிருப்பு அதிகரிக்க அது உதவும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நீங்கள் ஆற்றலுடனும் துடிப்புடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.02.2024

## தனுசு

கடினமான முயற்சிகள் செய்தால் இன்றைய நாளை நல்ல முறையில் அமைத்துக் கொள்ளலாம். உங்கள் திறமைகளை மேம்படுத்த இந்த நாளை பயன்படுத்துங்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளில் பொறுமையுடன் செயலாற்ற வேண்டும். பணிச் சுமை காரணமாக குறித்த நேரத்தில் கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க முடியாது.

குடும்பத்தின் மீது அக்கறைகாட்டி உங்கள் துணையுடன் அதைப்பற்றி ஆலோசனை செய்வதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று கையிலிருக்கும் பணம் போதுமானதாகவும் திருப்தி அளிப்பதாகவும் இருக்கும்.உங்கள் கடின உழைப்புக்காக ஊக்கத்தொகை பெறுவீர்கள்.

## கும்பம்

இன்று குடும்ப பிரச்சினைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். இந்தப் பிரச்சினைகளை சுமுகமாக தீர்ப்பதற்கு பெரியவர்களின் ஆலோசனையைப்பெற வேண்டும்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்துக்குள் முடிப்பீர்கள். உங்கள் செயல்திறன் உங்கள் சகபணியாளர்களின் செயல்திறனை மிஞ்சியதாக இருக்கும்.

குழப்பமான எண்ணங்கள் காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய நடத்தையை தவிர்த்திடுங்கள். பண இழப்புகள் காணப்படுகின்றன. நிதிலையை கவனமான முறையில் கையாள வேண்டும்.

கால்வலி ஏற்படலாம். தியானம் மேற்கொள்வதன் மூலம் மனஅழுத்தத்தை குறைக்கலாம்.

## மகரம்

இன்று உங்கள் இலக்குகளை அடைய கடின முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.உங்கள் மீது நம்பிக்கை வைத்து முயன்றால் நல்ல விளைவுகள் ஏற்படும்.

இன்றைய பணிகள் சற்று சவாலானதாக இருக்கும். பணிச்சுமை காரணமாக பணிகளில் தவறுகள் நேரலாம்.

பாதுகாப்பற்ற உணர்வு அதிகமாக காணப்படும். இது உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

வீட்டில் இருக்கும்பெரியவர்களின் உடல் நலனிற்காக செலவுகள் செய்ய நேரலாம். அதனால் உங்கள் செலவினங்கள்அதிகமாக இருக்கும். சேமிக்க இயலாது.

குழப்பமான எண்ணங்கள் காரணமாக உங்கள் உடல்நிலை ஆரோக்கியமாக இருக்காது.

## மீனம்

இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று முயற்சியே இல்லாமல் கடினமான பணிகளை செய்து முடிப்பீர்கள். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். திறமையாக பணியாற்ற பயனுள்ள கால அட்டவணையை அமைத்து செயல்படுவது சிறந்தது.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்குச் செல்வதன் மூலம் மகிழ்ச்சியை பராமரிக்க முடியும்.

பணவரவு மகிழ்ச்சியை அளிக்கும். சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நேர்மறையான மனநிலை உங்கள் ஆரோக்கியத்தில் பிரதிபலிக்கும்.









# லொத்தர் சீட்டுக்களின் பரிசுகள் ஜனாதிபதியால் வழங்கி வைப்பு

தேசிய லொத்தர் சபையினால் 2023 ஆம் ஆண்டு விற்பனை செய்யப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் சூப்பர் பரிசு மற்றும் மில்லியன் பரிசுத் தொகைகளுக்கான காசோலைகள் மற்றும் வாகனங்கள் வென்றவர்களுக்கான ஆவணங்கள் ஆகியவற்றை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவின் தலைமையில் நிதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, கொவிசெத, மெகா பவர், மெகா பவர் 60 உள்ளிட்ட லொத்தர் சீட்டிழுப்புக்களின் வெற்றியாளர்களுக்கான பணப் பரிசு மற்றும் வாகன பரிசுகள், விற்பனை முகவர்களுக்கான ஊக்குவிப்பு பரிசுகள், சான்றிதழ்கள் என்பனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

அதற்கு மேலதிகமாக தேசிய லொத்தர் சபையினால் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் “அத சம்பத” புதிய லொத்தர் சீட்டை வெளியிடும் நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது. அதன் முதல் சீட்டு தேசிய லொத்தர் சபையின் தலைவர் சீ.யாபா அபேவர்தன அவர்களினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி ரெனோல்ட் சீ. பெரேரா ஆற்றிய சேவைகளைப் பாராட்டும் வகையில் தேசிய லொத்தர் சபையினால் வழங்கப்பட்ட நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

தேசிய லொத்தர் சபை 2023 ஆம் ஆண்டுக்கான வருமானத்தில் 7.1 பில்லியன் ரூபா நிதியை அரச ஒருங்கிணைந்த நிதியத்திற்கு வழங்கப்பட்டதோடு, அதற்மைவான காசோலை தேசிய லொத்தர் சபையின் தலைவர் சமீர. சீ. யாப்பாவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருகை தந்திருந்த லொத்தர் சீட்டிழுப்பு வெற்றியாளர்களுக்கான பணப் பரிசு, வாகன பரிசு, விற்பனை முகவர்களுக்கான பணப் பரிசு, சான்றிழ்கள் என்பன நிதி இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்லாபிட்டிய மற்றும் செஹான் சேமசிங்க ஆகியோரினால் வழங்கப்பட்டன.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, திறைசேரியின் பிரதி செயலாளர்களான டபிள்யூ.ஏ.சரத்குமார, ஆர்.எம்.பி. ரத்நாயக்க, ஏ.கே.செனவிரத்ன உள்ளிட்டவர்களுடன் நிதி அமைச்சின் அதிகாரிகள், தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், சீட்டிழுப்பு வெற்றியாளர்கள், விற்பனை முகவர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.









# இயற்கை நுண்ணறிவை பயன்படுத்தினால் உலகில் யுத்தம் என்பதே நடக்க மாட்டாது!

## எழுத்தாளர் நாகேஸ்வரன் அருள்ராசா சுவிஸ் நிகழ்வில் உரை

இயற்கை நுண்ணறிவை பயன்படுத்தினால் உலகில் யுத்தமே நடக்காது. இயற்கை நுண்ணறிவு அன்பை போதிக்கிறது. செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தியதால் தான் ரஷ்ய – உக்கிரைன் யுத்தம் உருவானது. இஸ்ரேல் – பாலஸ்தீன யுத்தம் உருவானது.

தொழிலதிபரும் எழுத்தாளருமான கலாநிதி நாகேஸ்வரன் அருள்ராசா, சுவிஸ் சூரிச் நகரில் இடம்பெற்ற கிழக்கில் சிவந்த சுவடுகள் என்ற நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் இரா.துரைரத்தினம் எழுதிய கிழக்கில் சிவந்த சுவடுகள் நூல் அறிமுக விழா ஊடகவியலாளர் தாந்தியான் வேதநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு–

சூரியனால் மட்டும் கிழக்கு சிவக்கவில்லை. இனமோதல்களால் மதமோதல்களால் இயக்க மோதல்களால் பிரதேச மோதல்களாலும் கிழக்கு சிவந்திருக்கிறது.

போரின் வலிகளை மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் வலிகளை ஆதாரபூர்வமாக இந்நூல் பேசுகிறது. இது ஒரு ஆவணம். இந்நூல் அடுத்த சந்ததிக்கும் சென்றடைய வேண்டும்.

விபுலானந்த அடிகளார் கிழக்கு மாகாணத்தில் பிறந்த ஆளுமைமிக்க ஒருவர். அவர் அன்பைப் போதித்தார். கல்வியை போதித்தார். பல கல்லூரிகளை கட்டித்தந்தவர். அவர் கல்முனையில்தான் ஆரம்ப கல்வியை கற்றார். அந்த கல்முனையில் 1990 யூன் 20 ஆம் திகதி நடந்த சம்பவங்களை அறிகிற போது உடம்பெல்லாம் சிலிர்க்கிறது. அந்த அவலங்கள் துன்பங்களை இழப்புக்களை எல்லாம் இந்த நூல் பேசுகிறது.–என்றார்.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட சுவிட்சர்லாந்து சோசலிச ஜனநாயக கட்சி உறுப்பினரும் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினரும் தொழிலதிபருமான கலாநிதி சிறி இராசமாணிக்கம் உரையாற்றுகையில்,

எமது இனத்தின் வலிகளைச் சுமந்து வந்திருக்கும் கிழக்கில் சிவந்த சுவடுகள் என்ற இந்த நூல் ஆங்கிலம் ஜேர்மன் ஆகிய பிறமொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட வேண்டும் என தெரிவித்தார்.

சர்வதேசத்தின் முன் நாம் நீதி கோர வேண்டுமாக இருந்தால் இத்தகைய ஆவண நூல்கள் பிறமொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டும் என கலாநிதி சிறி இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நூல் அறிமுக உரையை எஸ்.ஜெயமோகனும் நூல் விமர்சன உரையை ஊடகவியலாளர் புஸ்பராசா அசோக் லூயிசும் நிகழ்த்திர்.





ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் இரா.துரைரத்தினம் நிகழ்த்தினார். நூலாசிரியர் இரா.துரைரத்தினத்துக்கு ரி.ஆர்.ரி. தமிழ் ஒலி வானொலி சார்பில் மூத்த பத்திரிகையாளர் ஞா.குகநாதன் உலக இந்து ஆத்மீக அறக்கட்டளையின் தலைவர் வேலுப்பிள்ளை கணேசகுமார் ஆகியோர் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தனர்.



